பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 11 2024 **THURSDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பழங்குடியினர் பெருமை தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே இன்றிரவு 8 மணிக்கு உரையாற்றுகிறார்.

2. நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. மேகாலயாவில் செயல்படும் **HNLC** அமைப்பு மற்றும் கிளைப் பிரிவுகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

4. இலங்கையில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை தொடங்கியுள்ளது.

5. ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா 13-0 கோல்கணக்கில் தாய்லாந்தை வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

பழங்குடியினர் பெருமை தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே இன்று உரையாற்றுகிறார்.

அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் இரவு எட்டு மணிக்கு இந்த உரை ஒலிபரப்பாகிறது.

பகவான் பிர்ஸா முண்டாவின் பிறந்த நாள், பழங்குடியினர் பெருமை தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

நாட்டின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தில் பழங்குடியினரின் பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

குடியரசுத் தலைவரின் உரை, வானொலியின் அனைத்து முதன்மை அலைவரிசைகளிலும் நாளை காலை மணி 8.45-க்கும் மாலை மணி 5.30-க்கும் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

இந்த தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, பீஹாரின் **Jamui**-வில் நடைபெறும் நிகழ்ச்சியில் நாளை பங்கேற்கிறார்.

இந்த நிகழ்ச்சியை அகில இந்திய வானொலி நாளை காலை 11.30 மணி முதல் நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது.

>>>><<<<

மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு வரும் 20ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி, காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, **Marathwada** மாவட்டத்திற்கு உட்பட்ட சத்ரபதி **Sambhajinagar** –ல் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இலக்குகளை எட்டுவதில் மஹாராஷ்ட்ரா முன்னிலை வகிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மாநிலத்தில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

**Marathwada** மாவட்டத்தில் மட்டும் 70 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, **Igatpuri** –யில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு பேசினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு என்றும் அவர் கூறினார்.

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை பிஜேபி தெரிவித்து வருவதாக திரு. மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டினார்.

சிவசேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், அதன் பிரிவுக் கட்சியின் தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>><<<<

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாம் மற்றும் இறுதிகட்டமாக வரும் 20ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பொருளாதாரம் சீராக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>><<<<**

ஒடிசா மாநிலம், பூரியில் உள்ள ஸ்ரீ ஜெகந்நாதர் ஆலயத்தில் பேட்டரியில் இயங்கும் 10 வாகனங்களின் சேவையை மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹத் ஜோஷி இன்று தொடங்கி வைத்தார்.

இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த கோவிலில் பேட்டரியில் இயங்கும் வாகனங்களின் சேவை அறிமுகப்படுத்தப்படுவது, பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கான மத்திய அரசின் உறுதிப்பாட்டை எடுத்துரைப்பதாக கூறினார்.

**>>>><<<<**

மேகாலயாவில் செயல்பட்டு வரும் **HNLC** அமைப்பிற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்த அமைப்பில் தொடர்புடைய கிளைப் பிரிவுகளுக்கும் இந்த தடை பொருந்தும் என்று உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாகவும், ஐந்தாண்டுகளுக்கு இது அமலில் இருக்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

தகவல் ஒலிபரப்புத்துறையின் மூத்த பொருளாதார ஆலோசகர் திரு. **Rabindra Kumar Jena** தூய்மையே சேவை இயக்கத்திற்கான உறுதிமொழியை காணொலி வாயிலாக அலுவலர்களுக்கு செய்து வைத்தார்.

ஆகாஷ்வானி தலைமை இயக்குநர் திருமதி. **Pragya Paliwal Gaur,** கூடுதல் தலைமை இயக்குநர் திரு. **Madhu Nag** உள்ளிட்ட உயரதிகாரிகள் உறுதிமொழியை எற்றுக் கொண்டனர்.

**>>>><<<<**

ஒரே பாரதம், உன்னத பாரதம் இயக்கத்தின் கீழ், கஷ்மீர் இளைஞர்களுக்கான கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, சென்னையில் உள்ள தனியார் கல்லூரியை அவர்கள் இன்று பார்வையிட்டனர்.

இதில், தமிழ் கலாச்சாரத்தை பறைசாற்றும் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

சபரிமலைக்கு செல்லும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு, சென்னை சென்ட்ரல் - கொல்லம் இடையே  வாராந்தர சிறப்பு ரயில் வரும் 19 ஆம் தேதி தொடங்கி ஜனவரி மாதம் 14ஆம் தேதிவரை செவ்வாய்க்கிழமை தோறும் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

மறுமார்க்கத்தில் இந்த ரயில், கொல்லத்திலிருந்து, வரும் 20ஆம் தேதி தொடங்கி, ஜனவரி மாதம் 15ஆம் தேதிவரை புதன்கிழமை தோறும் புறப்படும் என்று தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதேபோல், சென்னை சென்ட்ரல் - கொல்லம் இடையே மற்றொரு வாராந்தர சிறப்பு ரயில் வரும் 23ஆம் தேதி தொடங்கி, ஜனவரி மாதம் 18ஆம் தேதிவரை சனிக்கிழமை தோறும் இயக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுமார்க்கத்தில் இந்த சிறப்பு ரயில் வரும் 24ஆம் தேதி தொடங்கி, ஜனவரி மாதம் 19ஆம் தேதிவரை ஞாயிற்றுக்கிழமை தோறும் புறப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

இலங்கையில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு முடிவடைந்ததை அடுத்து, வாக்கு எண்ணிக்கை தொடங்கியுள்ளது. வாக்கு எண்ணிக்கை முன்னணி நிலவரங்கள், இரவு 10 மணி முதல் வெளிவர தொடங்கும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**>>>><<<<**

பங்களாதேஷ் அரசியல் சாசனத்தில் மதச்சார்பின்மை என்ற பகுதியை நீக்க வேண்டியதன் அவசியத்தை **Muhammed Yunus** தலைமையிலான  இடைக்கால அரசு வலியுறுத்தியுள்ளது.

அந்நாட்டில் 90 சதவீதம் இஸ்லாமியர்கள் இருப்பதைக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

>>>><<<<

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா 13-0 கோல் கணக்கில் தாய்லாந்தை வென்றது. பீகாரின் **Rajgir-**ல் நடைபெற்ற இப்போட்டியில் தீபிகா அதிரடியாக ஆடி 5 கோல் அடித்தார். இந்த வெற்றியின் மூலம் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. **Mohamed Amaan** தலைமையிலான இந்த அணியில் **Vaibhav Suryavanshi** உள்ளிட்ட 14 பேர் இடம்பெற்றுள்ளனர். இப்போட்டி ஐக்கிய அரபு எமிரேட்டில் வரும் 29ஆம் தேதி தொடங்குகிறது.

>>>><<<<

பஹ்ரைன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Vishal Vadudevan, Athul John Methew, Kavin, Charan Naik, Manraj Singh, Yashvi Bhat, Durga**, **Prakriti Bharath** மற்றும் **Prerana Shet** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>><<<<

ரயில்வே அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி வலுவான நிலையில் உள்ளது. அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 324 ரன் எடுத்துள்ளது.

ரயில்வே அணி முதல் இன்னிங்ஸில் 229 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>><<<<

**Lignano** சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

இத்தாலியில் நடைபெற்ற இப்போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில், **Sarthak Arya** மற்றும் மகளிர் பிரிவில் **Syndrela Das** தங்கப்பதக்கத்தையும், **Divyanshi Bhowmick** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>><<<<

மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் அபெய் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>END<<<<